வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 16.12.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 350 | பக்கங்கள் : 08

# இலங்கைக்கு 120 மில்லியன் டொலர் பேரிடருக்கான அவசரகால நிதியுதவி

## உறுதிப்படுத்தியது உலக வங்கி

கொழும்பு, டிசெம்பர் 16

டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பெரும் சேதங்களைத் தொடர்ந்து, இலங்கை அரசின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், உலக வங்கி தற்போதுள்ள திட்டங்களில் இருந்து நிதியை மறுசீரமைத்து அமெரிக்க டொலர் 120 மில்லியன் வரை அவசர உதவியை வழங்கியுள்ளது.

இந்த நிதி, கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரம், குடிதண்ணீர், கல்வி, வேளாண்மை மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் மற்றும் அக்கட்டமைப்புகளை மீளமைக்க பயன்படுத்தப்படும்.

உலக வங்கி குழுமத்தின் தனியார் துறை பிரிவான சர்வதேச நிதி கழகம், வேளாண்மை, உற்பத்தி, தளபாடம் போன்ற முக்கிய துறைகளில் ஆலோசனை மற்றும் மூலோபாய முதலீடுகள் மூலம், குறிப்பாக சிறு, நடுத்தர மற்றும் குறு தொழில் முனைவோர்களை ஆதரித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பொருளாதார மீட்பை வலுப்படுத்தவும் தொடரும்.

பேரிடர் குறைப்பு மற்றும் மீட்புக்கான உலகளாவிய வசதியுடன் இணைந்து உலகளாவிய விரைவு பேரிடர் சேத மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது சேதத்தின் அளவுகளைத் துல்லியமாக மதிப்பிட்டு, மீட்பு நடவடிக்கைகளுக்கான முன்னுரிமைகளை நிர்ணயிக்க உதவும்.

"மீண்டெழும் இலங்கை" நிதிய




மைப்பை உருவாக்குவது உள்ளிட்ட விரிவான மீட்பு திட்டங்களில் இலங்கை அரசுடன் உலக வங்கி நெருக்கமாக செயல்பட்டு வருகிறது.

உலக வங்கி அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களிடம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்ததுடன், இலங்கையர்களின் தாங்கும்திறன் மற்றும் அரசின் விரைவான நடவடிக்கைகளை பாராட்டினர்.

உலகளாவிய விரைவு பேரிடர் சேத மதிப்பீட்டின் முடிவுகளின் 07

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 16

நாட்டில் நிலவிய அனர்த்த நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன.

அதற்கமைய, பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நேற்று பாடசாலைகளுக்கு அழைக்கப்பட்டனர்.

அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட 147 பாடசா லைகளை இன்று மீண்டும் ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் கல்வி 07

## 5ஆம் கட்ட மீளாய்வு ஒப்புதலுக்கு இன்றுகூடும் நாணய நிதிய குழு!

கொழும்பு, டிசெ. 16

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதி திட்டத்தின் 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பான ஒப்புதலுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் குழு இன்று கூடவுள்ளது.

இணக்கப்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் அடுத்த கட்டமாக இலங்கைக்கு 347 மில்லியன் டொலர் நிதிஉதவி கிடைக்கப்பெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 07

## டித்வா பாதிப்புகளை மதிப்பிட வருகிறது உலக வங்கி குழு

கொழும்பு, டிசெ. 16

டித்வா புயலினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள மொத்த பாதிப்புகள் தொடர்பான விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ள, உலக வங்கிப் பிரதிநிதிகள் அடங்கிய குழு விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

பேரிடர் சேதம் மற்றும் அதன் மொத்த தாக்கங்களை மதிப்பிடும் இந்த செயன்முறையில், உலக வங்கியுடன் இணைந்து மேலும் பல சர்வதேச அமைப்புகளும் பங்கேற்க உள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே பேரிடர் நிவாரண 07

## மாணவர்கள் இடைவிலகல் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 16

கல்வி அமைச்சின் 2025ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கையின் படி, 13 வருடக் கல்வியை நிறைவு செய்வதற்கு முன்னரே பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் 07

## பேரிடருக்கு பின் இடம்பெயர்வு முகாம்களில் பெண்கள் பாதுகாப்பு குறித்து கடும் கவலை

கொழும்பு, டிசெ. 16

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட இடம்பெயர்வு முகாம்களில் அதிக நெரிசலும், தனியுரிமை இல்லாமையும் காரணமாக, குறிப்பாக இளம் வயது சிறுமிகள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிப் பெண்கள் போன்ற பாதிப்புக்கு உள்ளான குழுக்களுக்கு எதிரான வன்முறை அபாயம் அதிகரித்துள்ளதாக மனிதாபிமான அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் தெரிவிப்பதன்படி, பேரழிவுகளின் போது வழக்கமான பாதுகாப்பு அமைப்புகள் சீர்குலைவதால், பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

சுகாதார சேவைகளுக்கான அணுகல் தடைப்படுதல், குறைந்த பாது காப்பு 07

## சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்கு அரசு தாமதிக்கக்கூடாது

### கென்யாவுக்கான முன்னாள் தூதுவர் கணநாதன்

கொழும்பு, டிசெ. 16

இலங்கையின் நவீன வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றின் பின்னணியில், சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவதில் இலங்கை எந்தவித தாமதமும் செய்யக்கூடாது என கென்யாவுக்கான முன்னாள் தூதுவர் கணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த பேரழிவு 2004 ஆம் ஆண்டு சுனாமியைக்கூட மிஞ்சும் அளவுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படுவதுடன், 07

## யாழ்ப்பாண விமான நிலைய பயணிகள் முனைய கட்டடத்துக்கு நேற்று அடிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விமான நிலையத் தலைவர் ச 07



## 3 நாள்கள் பாடசாலை எதற்கு?

### இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

கொழும்பு, டிசெ. 16

டிசெம்பர் 29 முதல் அரச பாடசாலைகள் மூன்று நாட்கள் மட்டுமே நடத்தப்படுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்ட சுற்றறிக்கையின் படி, மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் டிசெம்பர் 16 முதல் 22 வரை நடைபெறும் என்றும், அதனைத் தொடர்ந்து டிசெம்பர் 28 07

## 18,000இற்கும் மேற்பட்ட தொழில்கள் டித்வா புயல் காரணமாகப் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 16

டித்வா புயல் காரணமாக நாட்டில் 18,000 இற்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, தொழிற்துறை பேரிடர் உதவி மையம் நேற்று வரை 18,321 முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகளை பதிவு செய்துள்ளதாக தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் தகவலின்படி, தொழில்துறை அமைச்சின் கீழ் உள்ள உற்பத்தித்துறையைச் சேர்ந்த 6,362 தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனுடன் 7,510 நுண்தொழில்கள், 6,256 07

## அர்ஜுன ரணதுங்க கைதாவார்

கொழும்பு, டிசெ. 16

அதிகூடிய விலையில் கேள்வி கோரல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சுமார் ரூ. 800 மில்லியன் இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என 07

## தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குள் நாட்டில் பொருளாதார நெருக்கடி!

### எச்சரிக்கிறது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, டிசெ. 16

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்கணித்ததுபோல், டித்வா புயல் காரணமாக இலங்கை 2026 சிங்கள - தமிழ் புத்தாண்டுக்குள் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளக் கூடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ நேற்று தெரிவித்துள்ளார்.

"இலங்கை வெளிநாட்டு நாணய 07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு செல்ல இருந்தோரை இறந்தவரின் சடலத்துடன் பயணிக்க கூறியதால் குழப்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

நெடுந்தீவு செல்வதற்கு போதிய படகு வசதிகள் இல்லாத நிலையில், இறந்தவரின் பூதவுடலை கொண்டு செல்லும் தனியார் படகில் பயணிகளை ஏற்ற முற்பட்டமையால், குறிகாட்டுவான் இறங்குதுறையில் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று திங்கட்கிழமை , நெடுந்தீவில் உள்ள அரச திணைக்களங்களில் வேலை செய்வோர் , நெடுந்தீவுக்கு தேவை கருதி செல்வோர், சுற்றுலா செல்வோர் உள்ளிட்டவர்களுடன், மேலதிகமாக வெள்ள நிவாரணம் வழங்குவதற்கான அரச உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட வங்கி ஊழியர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சி சிறிதரன் குழுவினர் என 150 இற்கும் மேற்பட்டோர் நெடுந்தீவு செல்வதற்காக காத்திருந்தனர்.

குறிகாட்டுவான்-நெடுந்தீவுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் நெடுந்தாரகை படகு வந்தவேளை அதில் ஏறுவதற்கு பலரும் முயன்றனர். ஆயினும் அந்த படகில் 100 பேரை மாத்திரமே ஏற்ற முடியும் எனக் கடற்படையினர் திடமாகக் கூறி விட்டனர். அதனால் ஏனையோர் நெடுந்தீவு செல்லமுடியாத நிலைமை காணப்பட்டது.



இதையடுத்து பாராளு மன்ற உறுப்பினர் சிறீதரன், நெடுந்தீவு பிரதே செயலர், யாழ். மாவட்ட செயலர் உள் ளிட்ட பல்வேறு தரப்பினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய வேளை நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடை யில் சேவையில் ஈடுபடும் குமு தினி படைக்கும் பழுதடைந்துள்ளமையால் சேவையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பின்னர் இறந்தவரின் சடலத்துடன் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கி தனியார் படகு புறப்படவுள்ளதாகவும் அந்த படகில் ஏறிச் செல்லுமாறும் கூறப்பட்டுள்ளது.

அதற்கு பயணிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் அவ்விடத்தில் குழப்பமான நிலைமை காணப்பட்டது.

பின்னர் பிறிதொரு தனியார் படகு ஏற்பாடு செய்யப்பட்டு , அங்கிருந்த அனைவரையும் நெடுந்தீவு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது

நெடுந்தீவில் வேலை செய்யும் பலரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் திங்கட்கிழமை நெடுந்தீவு நோக்கிச் செல்வதால் திங்கட்கிழமை காலையில் அதிகளவானோர் வருகை தருவார்கள்.

இந்நிலையில் நிவாரணப் பணிகளுக்காக மேலும் பலரும் வருகை தருவார்கள் எனவும் தெரிந்த நிலையில் பயண ஒழுங்குகளை உரிய முறையில் செய்யாமல் இருந்த அரச உயர் அதிகாரிகளை பலரும் கடிந்துகொண்டனர். (அ)

# பருத்தித்துறை நகர சபையின் பாதீடு ஒரு மேலதிக வாக்கால் நிறைவேறியது

யாழ்ப்பாணம், டிசெ. 16

பருத்தித்துறை நகரசபையின் நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த பருத்தித்துறை நகரசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை அமர்வு நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் ஆரம்பமானது. இதன்போது பருத்தித்துறை நகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நகரபிதாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டது.

பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய பேரவையின் 5 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினர்கள் இருவரும், சுயேச்சை (ஊசி) உறுப்பினர் ஒருவரும் வாக்களித்திருந்தனர். தமிழ் அரசு கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஈ.பி.டி.பி ஆகியவற்றை சேர்ந்த ஏழு உறுப்பினர்களும் எதிராக வாக்களித்திருந்தனர். இதையடுத்து ஒரு மேலதிக வாக்கால் பாதீடு நிறைவேற்றப்பட்டது.



# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திறந்த போட்டிப் பரீட்சை 20ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் 111 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்தாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைக்கு விண்ணப்பித்து, இன்று வரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் நாளையிலிருந்து எதிர்வரும் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தினுள் 021 221 9939 என்ற மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்த்து மறுபக்கத்தில் கோரப்படும் விவரங்களை உடனடியாகப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வருகைதரும் பரீட்சார்த்திகள் எக்காரணம் கொண்டும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை கவனத்தில் கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ள வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எவ்வாறாயினும், மேற்குறித்த பரீட்சை தொடர்பில் யாதாயினும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் பரீட்சார்த்திகள் 021 221 9939 என்ற மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் மாத்திரம் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (அ)

# சிறப்பாக இடம்பெற்ற கலைமுகம் அமுதமலரின் உரையாடல் அரங்கு



யாழ்ப்பாணம், டிசெ. 16

கலைமுகம் இதழின் அமுதமலரின் உள்ளடக்கங்கள் தொடர்பிலான உரையாடல் அரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவந்துகொண்டிருக்கும் திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கிய காலாண்டிதழான கலைமுகம், அதன் 80 ஆவது இதழான அமுதமலர் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நேர்காணல்கள், நூல் மதிப்பீடுகள், பத்தி என சிறப்பு தொகுப்பாக வெளிவந்துள்ளது.

நா. நவராஜ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப உரையினை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனரான ஜோன்சன் ராஜ்குமார் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நா.நவராஜ் தலைமையுரையை தொடர்ந்து ரக் ஷானா ஷரிபுத்தீன், சி.விமலன் ஆகியோர் அமுதமலரில் வெளிவந்த சிறுகதைகள் குறித்தும் அதன் உள்ளடக்கங்களை செம்மையாக விவரித்தும் பேசியிருந்தனர்.

தொடர்ந்து நேர்காணல், பத்தி தொடர்பில் பேராசிரியர் சி.ரகுராமும் கட்டுரைகள் பற்றி ந.குகபரன், தி.செல்வமனோகரன் ஆகியோரும் பேசியிருந்தனர்.

தொடர்ந்து அமுதமலரில் வெளியான கவிதைகள் பற்றி சு.குணேஸ்வரன் பேசியிருந்தார்.

தொடர்ந்தும் வாசகர்கள் சார்பில் கவிஞர் சோ. பத்மநாதன், அறிந்திரன் இதழின் ஆசிரியர் கணபதி சர்வானந்தா ஆகியோர் கருத்துரையை வழங்கினர்.

# பூநகரி பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேறியது

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சி - பூநகரி பிரதேச சபையின், 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம், 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சனால் நேற்று சபை அமர்வில் முன்வைக்கப்பட்டது.

பாதீட்டை அங்கீகரிக்கக் கோரி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 10 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஓர் உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் சுயேச்சைக்குழு இரண்டின் ஓர் உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும் சுயேச்சைக்குழு ஒன்றின் ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மூன்று உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தியின் ஓர் உறுப்பினரும் நடுநிலை வகித்தனர்.

இதன்படி, 20 உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேச சபையில 13 மேலதிக வாக்குகளால் 2026இற்கான பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது. (அ)

# யாழில் கிராம சேவகரின் முறைகேடுகளை அம்பலப்படுத்தியவருக்கு கொலை மிரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

நாகர்கோவிலில் கிராம அலுவலரின் செயற்பாடு பற்றி குற்றம் சாட்டிய நபருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களில் முதன்மையாக நாகர்கோவில் காணப்படுகிறது.

அந்தக் கிராமத்தில் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும், பாதிக்கப்பட்ட சில வீடுகளை இதுவரை கிராம உத்தியோகத்தர் வந்து பார்வையிடவில்லை எனவும் நாகர்கோவில் மக்கள் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கருத்து தெரிவித்த நபருக்கு தொலைபேசி அழைப்பு மூலம், ஊடகங்களுக்கு கொடுத்த கருத்தினை வாபஸ் வாங்குமாறும், இல்லை என்றால் ஆள் வைத்து கொலை செய்ததாகவும் கொலை மிரட்டல் விடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# முத்துஐயன்கட்டு குள மீனவர் வாழ்வாதாரம் இழப்பு

முல்லைத்தீவு, டிசெ. 16

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற வானிலையினால் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்து ஐயன்கட்டுகுள நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

முத்து ஐயன்கட்டுகுளத்தில் பாதுகாப்பாக கட்டிவைக்கப்பட்டிருந்த 15 சிறிய படகுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன், மீன்பிடி வலைகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மீன் குஞ்சுகளும் அடித்துச் செல்லப்பட்டமையால் 101 குடும்பங்கள் கடுமையான வருமான இழப்பை எதிர்நோக்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.12.2023 செவ்வாய்க்கிழமை

விசுவாவசு வருடம், கார்த்திகை 30

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ் கட்சிகளின் பேரிடர் மீட்பு திட்டம் என்ன?

மலையகத்தில் காணியில்லாதவர்களை வரவேற்பதாக தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஆதரவாளர்களும் கூறிக் கொண்டிருக்கும் நிலையில், பேரனர்த்தத்தால் அதிக பாதிப்புக்குள்ளான வவுனியா, மன்னாரின் சில பகுதிகளிலுள்ள மக்களை வேறு இடங்களில் குடியேற்றுவதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் ஈழநாடு ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தது. ஒரு பேரனர்த்தத்தால் மக்கள் பாதிக்கப்படும்போது, அந்த மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமைகள் முதலில் அந்த மக்களின் பிரச்னைகள் பற்றித்தான் கவனம் கொள்ளவேண்டும் - அதுதான் ஒரு தலைமையின் கடமையும்கூட. ஆனால், வடக்கு - கிழக்கில் நடப்பதோ வேறு. மலையகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள்மீது மனிதாபிமான ரீதியில் கரிசனை காண்பிப்பது தேவையானஒன்று - அதில் தவறில்லை-தவிர, அவ்வாறான மனிதாபிமான நடவடிக்கைகள் நிச்சயம் மேற்கொள்ளப்படத்தான் வேண்டும். ஆனால், மலையகத்தில் காணியில்லாத மக்கள் வடக்கு - கிழக்குக்கு வாருங்கள் என்று கூறுவதானது, தங்களின் அரசியல் கடமையை தட்டிக்கழிக்கும் ஒரு செயலாகும்.

பேரனர்த்தம் எப்போது எவ்வாறு வெளிக்கிளம்பும் என்பதை எவராலும் ஊகிக்கமுடியாது. வானிலை ஆராய்ச்சியாளர்களும் ஓர் எல்லைக்கு மேல் எதிர்வு கூறமுடியாது. ஆனால், ஒரு முன்னெச்சரிக்கையை வழங்கமுடியும். அவ்வாறுதான் தற்போதும் சில முன்னெச்சரிக்கைகள் இருந்தன. ஆனால், அதனையும்மீறி பேரழிவொன்று ஏற்பட்டுவிட்டது. மற்றும்படி மக்கள் என்னதான் முன்னெச்சரிக்கைகள் இருந்தாலும் தங்களின் சொந்த இடங்களில் இருந்து இலகுவாக வெளியேற மாட்டார்கள். தங்களின் உயிருக்கு ஆபத்து நெருங்குகிறது என்னும் அச்சம் ஏற்பட்டால் ஒழிய வாழ்விடங்களை விட்டு வெளியேற மாட்டார்கள். இவ்வாறானதொரு பின்னணியில்தான் பல உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வாறான பின்னணியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது வெறுமனே வானிலை ஆராயச்சியை அடிப்படையாகக் கொண்டு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதுடன் முடிவுறுவதில்லை. மாறாக, பாதிக்கப்பட்ட இடங்களின் பாதிப்பை மதிப்பிட்டு மீண்டும் ஒரு பேரனர்த்தம் ஏற்பட்டால் அந்தப் பகுதியில் வாழும் மக்களால் அதனை எதிர்கொள்ள முடியுமா என்பதை ஆராய்ந்தறிந்து, அதற்கேற்ப முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். வாழ்வதற்கு பொருத்தமற்ற இடங்களில் மக்கள் வாழ்கின்றார்கள் என்றால்,அவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி, தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றிச் சிந்திக்கவேண்டும். அவ்வாறில்லாது எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் தேடும் வகையில் சிந்திப்பதும் செயல்படுவதும் பொறுப்பான அரசியல் தலைமைகள் செய்யும் காரியமல்ல.

வடக்கு - கிழக்கைப் பிரிதிநிதித்தும் செய்யும் அரசியல் தலைமைகள் என்போர் முதலில் இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டு, அதனடிப்படையில் அரசாங்கத்துடன் பிரத்தியேகமாகப் பேசவேண்டும். அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் பேரனர்த்த மீட்பு நடவடிக்கைகளை இன்னும் திறம்பட மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கவேண்டும். அவ்வாறில்லாது, இன்னொரு பகுதியிலுள்ள மக்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பது நேர்மையான அணுகு முறையல்ல.

# பணம் பறிக்கும் மோசடி தீவிரம்!

கொழும்பு, டிசெ. 16

இலங்கை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வங்கி ஊழியர்களாக நடித்துப் பணம் பறிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட மோசடி குழுக்கள் குறித்து பொதுமக்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள் இலங்கை பொலிஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதி மோசடி விசாரணைப் பிரிவு அதிகாரிகள் என்றோ அல்லது வங்கிப் பிரதிநிதிகள் என்றோ தவறாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, பொதுமக்களை அச்சுறுத்தி ஏமாற்ற முயற்சிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மோசடி குழு பணமோசடி அல்லது நிதி குற்றங்கள் போன்ற பாரதூரமான குற்றங்களுக்காக நீங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளீர்கள் என்றும், உடனடி கைது அல்லது சட்ட நடவடிக்கை தொடரும் என்றும் கூறி பயத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் பாதிக்கப்பட்டவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது அண்மைய பரிவர்த்தனைகள் போன்ற பகுதியளவு தனிப்பட்ட விபரங்களை அடிக்கடி குறிப்பிடு வார்கள் எனவும் விசாரணை இரகசியமானது என்ற போர்வையில் குடும்ப உறுப்பினர்கள் உட்பட யாரிடமும் இந்த விடயத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என்று அறிவுறுத்துவார்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், எந்தவொரு பொலிஸ் அதிகாரியோ அல்லது அரச நிறுவனமோ தொலைபேசியில் பணம், வங்கி விபரங்கள் அல்லது இரகசிய தனிப்பட்ட தகவல்களை ஒருபோதும் கோரமாட்டார்கள் என்று இலங்கை பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

கைதுகள் அல்லது சட்ட அறிவிப்புகள் தொலைபேசி மூலம் அல்லாமல், உத்தியோகபூர்வ கடிதங்கள், அழைப்பாணைகள் மூலமாக மட்டுமே வழங்கப்படும் என தெளிவுபடுத்தியுள்ளது.

அழைப்பாளர்கள் கொடுத்த இலக்கங்களைப் பயன்படுத்தாமல், பொலிஸார் இணையதளம் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாக அழைத்துச் சரிபார்க்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதியுடன் சஜித் சந்திப்பு!



கொழும்பு, டிசெ. 16

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ரகவுமி கடோனோவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. டித்வா சூறாவளி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே மேற்படி சந்திப்பு நடந்ததாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள ளது.

“இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்கொண்டிருந்தது. அவ்வேளை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியான்மைகள் மற்றும் தொழில்முனைவோரை தொழில் ரீதியாக கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர் தொகையை நன்கொடையாக வழங்கியமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய பேரிடர் நிலையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெளிவுபடுத்தினார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கை மீண்டும் எழுந்து நிற்பதற்குத் தேவையான ஆதரவுகளைப் பெற்றுத் தருமாறும் சஜித் கோரிக்கை விடுத்தார். (அ)

# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 16

காணி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் 42 வயதுடைய நபர் உயிரிழந்தார் என சமனலவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலங்கொடை, சமனலவெவ பிரதேசத்தில் உயிரிழந்தவரின் வீட்டின் அருகே உள்ள காணியில் இருந்தே துப்பாக்கி வெடித்தது. இதில், படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

# 981 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 16

நாட்டிலிருந்து போதைப்பொருளை முற்றாக அழிக்கும் நோக்கில் முழு நாடும் ஒன்றாக செயற்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனைகளில் 981 பேர் கைதாகினர்.

இதன்போது போதைப் பழக்கத்துக்கு அடிமையான 12 பேர் மறுவாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதோடு, 28 பேர் மீதான தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசெம்பர் - 16 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 01
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வுகாண்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழையகடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரதில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# செம்மணி அவலங்களை சித்திரிக்கும் "என்று தணியும்" நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவி புவஸ்டினா மெய்யழகன் எழுதிய "என்று தணியும்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் வீதியில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பளை பிரதேச செயலாளரும் கவிஞருமான இ. த. ஜெயசீலன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ம. இளம்பிறையன் கலந்து கொண்டார்.

தமிழ் மக்களின் வலி சுமந்த செம்மணி மனிதப் புதைகுழியின் அவலங்களை சித்திரிக்கும் சம்பாசனையுடன் கூடிய நாவல் வடிவமாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டினை எழுத்தாளரும் தமிழ் ஆசிரியருமான கனக பாரதி செந்தூரன் நிகழ்த்தினார்

நூலினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜெயசீலன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை ராஜா கிறீம் ஹவுஸ் நிறுவன உரிமையாளர் சின்ன ராஜா சண்முகநாதன் பெற்றுக் கொண்டார்.



(எ-05)

# புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் புதையல் தோண்டிய ஆறு பேர் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 16

புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பகுதியில் புதையல் தோண்டிய ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் குழுவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து அகழ்வாராய்ச்சி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் 35 முதல் 48 வயதுக்குட்பட்ட அநுராதபுரம், இனாமலுவ, மொரகொட, கலேவெல, மடாடுகம மற்றும் தேவிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்கள் வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ. 16

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினூடாக 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, போரதீவுப்பற்று பிரதேச இந்து ஆலயங்களின் பங்கேற்போடு கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினூடாக 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த 448 குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# யாழில் விவசாயிக்கு "ஏராள் வேந்தன்" விருது

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் - வலிகாமம் பிரதேசத்தை சேர்ந்த மூத்த விவசாயி ஒருவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச ஆண்கள் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இன்றும் தொடர்ச்சியாக விவசாயம் மேற்கொண்டு வரும் நாகநாதர் தர்மராசா என்ற மூத்த விவசாயி "ஏராள் வேந்தன்" எனும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவரோடு விவசாயத்தில் பக்க பலமாக இருந்த அவரின் மனைவிக்கும் சேர்த்து சிறப்புக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விருதை கழகச் சிறுவன் ரவிச்சங்கர் யக்சன் மற்றும் சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தினர் இணைந்து வழங்கினர்.

சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்ட குறித்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை சுன்னாகம் ரயில் நிலையம் அருகே உள்ள சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.




வருடாந்தம் சர்வதேச ஆண்கள் தினத்தை முன்னிட்டு சிறந்த விவசாயிக்கான விருது சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தால் வழங்கப்படவுள்ளது. (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக கல்விச் சீர்திருத்தம் பாதிக்கப்படாது!

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 16**

**நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு பாதிப்புகள் காரணமாக, 2026 ஜனவரியில் தொடங்கத் திட்டமிடப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் பாதிக்கப்படாது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஜனவரியில் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்போது, முன்னர் அறிவிக்கப்பட்ட அனைத்து மாற்றங்களும் சம்பந்தப்பட்ட வகுப்புகளில் நடைமுறைக்கு வரும் என அவர் கூறினார்.

மேலும் முழுமையான அமுலாக்கம் ஜனவரி 22 ஆம் திகதிக்குள் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கட்டமைப்புக்கு இணங்க செயற்படுமாறு சுற்றறிக்கைகள் மூலம் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கும் முன் ஆறாம் தர மாணவர்களுக்கு ஒரு வார கால அறிமுக நிகழ்ச்சி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேர அட்டவணை ஒரு நாளைக்கு 7 கற்பித்தல் காலங்களாக மாற்றப்படுவதுடன், ஒவ்வொரு பாடமும் 50 நிமிடங்கள் நீடிக்கும்.

மேலும் சீர்திருத்தத்தின்படி, சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை ஏழாகக் குறைக்கப்படவுள்ளது.

மாணவர்கள் கணிதம், ஆங்கிலம், தாய்மொழி, சமயம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய 5 முக்கியப் பாடங்கள் படிக்க வேண்டும்.

அத்துடன் தொழில்நுட்பம், அழகியல், முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவு, மனித நேயம் மற்றும் சமூக அறிவியல், மற்றும் சுகாதாரம் மற்றும் உடற்கல்வி போன்ற பிரிவுகளிலிருந்து மேலும் 2 பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் பாடசாலை நேரத்தை நீடிப்பதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

சீர்திருத்தங்களை இறுதி செய்வதற்கு முன்னர் தொழிற்சங்கங்களுக்கு தங்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டதாகவும், ஆனால் சில பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபடவில்லை என்றும் செயலாளர் களுவெவ தெரிவித்துள்ளார்.

(அ)

# வீதிச் சேதத்தை நீங்களே முறைப்பாடு செய்ய வசதி

## புதிய இணையத்தளம் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 16

போக்குவரத்து அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அமைச்சின் டிஜிட்டல் பணிக்குழுவுடன் இணைந்து, நாட்டிலுள்ள வீதிகள் தொடர்பான பிரச்னைகளை மக்கள் முறைப்பாடு அளிக்க ஒரு புதிய பொது இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளது.

**road-lk.org** என்ற இணையத்தள முகவரி ஊடாக குறித்த இணையத்தளத்துக்குப் பிரவேசிக்க முடியும்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக வீதிகளுக்கு ஏற்பட்ட சேதங்களைத் தொடர்ந்து, இந்த புதிய முறைமை ஒரு பரீட்சார்த்த திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் நிரந்தரமாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வீதி சேதம், மூடல்கள், விபத்துகள் மற்றும் நடைமுறையில் உள்ள திருத்தங்கள் போன்றவற்றை மக்கள் குறித்த நேரத்தில் முறையிட இந்த தளம் அனுமதிக்கிறது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறித்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், "இந்த தளம் வீதிப் பிரச்னைகள் குறித்த உடனடி தகவல்களைச் சேகரிக்க உதவுகிறது," என்று குறிப்பிட்டார்.

முறைப்பாடுகளை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கலாம்.

முறைப்பாட்டுடன் தொடர்புடைய புகைப்படங்களைச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளால் சரிபார்க்கப்படும்.

சரிபார்க்கப்பட்ட பின்னர், அந்தப் பிரச்னைகள் தேசிய வீதி வரைபடத்தில் குறிக்கப்படும்.

மாகாண வீதி அதிகாரசபைகளுக்கும் இந்தத் தரவை அணுகுவதற்கான அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அவுஸ்திரேலிய துப்பாக்கிச் சூடு: இலங்கையருக்கு பாதிப்பில்லை

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர

கொழும்பு, டிசெ. 16

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அங்கு வசிக்கும் இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி, பொண்டி கடற்கரையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடற்கரையில் தங்கியிருந்தவர்களை இலக்கு வைத்து இரண்டு துப்பாக்கிதாரிகளால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதுடன், இதில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட மேலும் 42 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நவம்பர் மாதத்துக்கான பருவகால சீட்டை மாணவர் இந்த மாதமும் பயன்படுத்தலாம்!

கொழும்பு, டிசெ. 16

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு நவம்பர் மாதத்துக்கான பருவகாலச் சீட்டு மூலம் இந்த மாதமும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் பயணிப்பதற்கான வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த மாத பயணச்சீட்டை சமர்ப்பித்து அந்த வசதியை பெற்றுக்கொள்ள முடியும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இதற்கிடையில், அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நிதியை திரட்டும் நோக்கில், ஜனவரி மாதத்தில் ஒரு நாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்க ஆசிரியர்கள் தயாராக இருப்பதாக பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

(அ)

# ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டிய 18 இளைஞர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 16

மஹரகம-பன்னிப்பிட்டிய ஹைலெவல் வீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை ஓட்டிய 18 இளைஞர்களை மஹரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பண பந்தயம் கட்டும்போது குறித்த இளைஞர் இதைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட 11 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அலை வடிவ காற்றழுத்தம்: நாட்டில் இன்று மழை அதிகரிக்கும

கொழும்பு, டிசெ. 16


கிழக்கு அலை வடிவ காற்றழுத்த தாக்கம் காரணமாக இன்று 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாட்டில் மழையுடனான வானிலையில் சிறிது அதிகரிப்பை எதிர்பார்க்க முடியும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும். அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். அத்துடன், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் விபத்துக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

(எ)



# சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் கண்டியில் மனிதாபிமான உதவிகள்

சம்மாந்துறை, டிசெ. 16

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று அந்த மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு செல்லும் முகமாக அவர்களின் இருப்பிடங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் அம்பாறை, சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் உதவி பிரதேச செயலாளர் வீ. வாஸீத் அஹமட் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் முதல் நாளாக கண்டி நகரின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான கெலிஓயா, கல்கமுவ ஆகிய பிரதேசங்களுக்கு சென்று சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (எ)

# நிவாரணம் வழங்கக் கோரி மக்களால் வெருகல் பிரதேச செயலகம் முற்றுகை

திருகோணமலை, டிசெ. 16

நிவாரணம் வழங்கக் கோரி திருகோணமலை, வெருகல் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சீரற்ற காலநிலை காரணமாகவும் மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்ததாலும் பல சேதங்கள் ஏற்பட்டன. இதனால், பாதிக்கப்பட்ட தங்களுக்கு நிவாரணங்களை அலுவலகத்தில் பூட்டி வைக்காது பகிருமாறும் கோரி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வெருகல் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட மக்கள் பிரதான நுழைவாயிலை மறித்து போராடினர். இதனையடுத்து, வெருகல் பிரதேச செயலக வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் கொடுப்பனவுகளை வழங்குமாறும் கோரிய மக்கள், பிரதேச செயலாளரை வெளியேற விடாது தடுத்தனர்.

(எ)

# கஞ்சாவுடன் கைதானவரிடம் விசாரணை

சம்மாந்துறை, டிசெ. 16

கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த நிலையில் கைதான சந்தேகநபர் குறித்து சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய நபர் குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தக் கைது சம்பவம் இடம்பெற்றது.

சம்மாந்துறை மலையாடி கிராமம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து 7 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள், ஒரு மோட்டார் சைக்கிள், தொலைபேசி என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (எ-01)

# மண்சரிவை அகற்றியவர் மீது தாக்குதல் நடத்தியவர் கைது!

கண்டி, டிசெ. 16


கண்டி- கொஹாகொட வீதியில் மண்சரிவு ஏற்பட்ட பகுதியில் உள்ள கற்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவரை தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி- கொஹாகொட வீதியில் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் உள்ள கற்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவரை, லொறியில் இருந்த நபரொருவர் தாக்கிக் காயப்படுத்தும் காணொலிகள் அண்மையில் சமூக ஊடகங்களில் பரவி வந்தது.

இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# கந்தளாய் குளத்தின் வான்கதவுகள் திறப்பு



திருகோணமலை, டிசெ. 16

கந்தளாய் குளத்தின் நான்கு வான்கதவுகளும் இரண்டாவது முறையாக திறக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நான்கு வான்கதவுகளும் ஒரு அடிக்கு திறக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் குளத்தின் மொத்த நீரின் கொள்ளளவு 114, 000 கன அடியாகும். கனமழை காரணமாக தற்போது நீரின் கொள்ளளவு 98, 895 கன அடியாக உயர்ந்துள்ளது.

தற்போது வினாடிக்கு 750 கன அடி அளவு நீர் வெளியேறி வருவதாகவும் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தின் தாக்கமாக, கந்தளாய் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து அடைமழை பெய்து வருகிறது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

(எ)

# கிழக்கில் விவசாய இழப்புக்கான உதவி தொகை வழங்க நடவடிக்கை

சம்மாந்துறை, டிசெ. 16

டித்வா புயல் சீரற்ற காலநிலை காரணமாக, கணிசமான அழிவுகளை சந்தித்த கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட விவசாய இழப்புக்கான உதவித் தொகையை வழங்குவதற்காக விவசாயத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து துரித நடவடிக்கை எடுத்திருப்பதாக விவசாய திணைக்களத்தின் கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம். எஸ். றினூஸ் தெரிவித்தார்.

நெற் செய்கை இழப்புக்கான உதவித் தொகையை வழங்குவதற்காக, விவசாயத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து கடந்த 9ஆம் திகதியிலிருந்து அழிவு மதிப்பீட்டுப் படிவங்களை விவசாயிகளுக்கு வழங்கி தகவல் திரட்டத் தொடங்கியுள்ளன.

இதேவேளை, மறுவயல் பயிர்கள், பழப்பயிர்கள், மரக்கறிப் பயிர்கள் என்பனவற்றுக்கான அழிவு மதிப்பீடுகளை நேரடியாக விவசாயத் திணைக்களமே மேற்கொண்டு வருகின்றது.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் துரித விவசாய மீளமைப்பு நடவடிக்கைகளின் பயனாக, இந்த மாத இறுதிக்குள் விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்ட அழிவுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

மேலும், அழிவடைந்த விவசாய நிலங்களில் மீள் நடுகையும் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. மீள் நடுகைக்கான கலப்பின மரக்கறி விதைகள் நடுகைக்கான தானியங்கள் உள்நாட்டில் கிடைக்காவிட்டால், அவற்றை வெளிநாடுகளிலிருந்தும் உடனடியாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அழிவுகளை கண்டு சோர்வடையாத விவசாயிகள் ஏற்கனவே, தாங்களாகவே முன்வந்து, சுயமுயற்சியில் மீளவும் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இது நம்பிக்கை தருவதாக அமைந்திருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

மண்சரிவால் பாதிக்கப்பட்ட

# நாவலப்பிட்டி- கண்டி பிரதான வீதி போக்குவரத்துக்கு மீண்டும் திறப்பு

கண்டி, டிசெ. 16

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதி போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக நேற்று திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற வானிலை காரணமாக நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்ட நிலையில், சீரமைப்புப் பணிகள் முடிவடைந்த பின்னர் தற்போது திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18 நாட்களுக்கு பின்னர் நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதி இவ்வாறு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள்...

முழுமையாக அழிவடைந்தன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனர்த்த நிலைமையை எதிர்கொண்ட பிரதேசங்களிலுள்ள மாணவர்கள் மற்றும் கல்வி, கல்விசாரா ஊழியர்களின் சீருடைகள் தொடர்பில் தளர்வான கொள்கையொன்று பின்பற்றப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## 5ஆம் கட்ட...

விரிவாக்கப்பட்ட நிதிவசதி திட்டத்தின் 5 ஆம் கட்ட மீளாய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கான செயற்திட்டப் பிரதானி எவான் பபஜோர்ஜியோ தலைமையிலான நாணய நிதிய அதிகாரிகள் குழுவினர்,கடந்த செப்ரெம்பர் 24 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்திருந்த நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

பெரும்போகப் பொருளாதார அபிவிருத்திகள், பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை அமுல்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அதனையடுத்து விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதிய செயற்திட்டத்துக்கு அமைவாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைக் கருத்திற்கொண்டே அதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்படும் என எவான் பபஜோர்ஜியோ அறிவித்திருந்தார்.

இந்த பின்னணியில் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பரிசீலனையைத் தொடர்ந்து உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் அடுத்த கட்டமாக 347 மில்லியன் டொலர் நிதியைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

இதன்மூலம் இதுவரையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியின் பெறுமதி 2.04 பில்லியன் டொலராக உயர்வடையும். அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கண்கா ணிப்புக்கு உட்பட்ட முக்கிய விடயங்களில் பெரும் பாலானவற்றை 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பேரிடருக்கு பின்...

நடைமுறைகள் மற்றும் நீண்டகால இடம்பெயர்வு ஆகியவை இந்த அபாயங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

இடம்பெயர்வு முகாம்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக வலுப்படுத்துவதுடன், அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் வலியுறுத்தியுள்ளது.

இந்த பேரழிவால் இளம் வயதிலுள்ள ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 22,500இற்கும் மேற்பட்ட கர்ப்பவதி பெண்கள் உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மதிப்பிட்டுள்ளது.

இவர்களில் பலர் காலத்துக்குள் மருத்துவ சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையை கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உளவியல் ஆதரவு சேவைகளை மேம்படுத்த அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எனினும், நிதி பற்றாக்குறை காரணமாக இந்த உதவி நடவடிக்கைகளின் அளவு கட்டுப்படக்கூடும் என ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் எச்சரித்துள்ளது.

தேவையான நிதியின் ஒரு சிறிய பகுதி மட்டுமே தற்போது கிடைத்துள்ள நிலையில், டித்வா சூறாவளியால் இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பு மற்றும் மரியாதையை உறுதி செய்ய, சர்வதேச சமூகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர், பேரழிவால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது ஏற்கனவே சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், எந்தப் பெண்ணும் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, அமைச்சு பிற அமைப்புகளுடன் இணைந்து நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார். (அ)

## மாணவர்கள்...

மாணவர்களின் எண் ணிக்கை அதிகரித்து! வருகின்றது.

மனித மற்றும் பௌதிக வளங்களின் விநியோகத்தில் காணப்படும் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, கல்வி முறைமை மீதான பெற்றோரின் நம்பிக்கை குறைந்துள்ளமையே இடைவிலகல்கள் அதிகரிக்க முக்கிய காரணம் என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன், இலவச பாடநூல்கள், சீருடைகள், பாடசாலை உணவு மற்றும் காப்புறுதி போன்ற பொருளாதாரத் தடைகளைக் குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் இருந்தபோதிலும், பல குடும்பங்கள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க நிதியியல் சுமைகளை எதிர்கொள்வதாக அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த காலங்களில் தேசிய அளவில் நிலவிய இடையூறுகளால் ஏற்பட்ட ஒழுங்கற்ற பாடசாலை நாட்காட்டியையும் குறித்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இது பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துவதையும் ஒட்டுமொத்த கற்றல் செயற்பாட்டையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்விச் செயற்பாடுகளைச் சாதாரணமாக மாற்றுவதற்கும், பொது நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும், கல்விச் சலுகைகளைத் தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் சீரமைப்பதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

## டித்வா பாதிப்புகளை...

நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், இத்தாலி அரசு சார்பில் ஏழு நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஜேர்மன் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளும் தலா ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குடிதண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார குழுக்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச குழுக்களின் வருகை, புயல் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சர்வதேச நன்கொடை...

ஆரம்ப மதிப்பீடுகளின்படி சேதம் அமெரிக்க டொலர் 7 பில்லியனுக்கு மேல் என கணிக்கப்பட்டுள்ளது. முழுமையான ஆய்வுகள் நடக்கும் பட்ட்சத்தில் இந்த தொகை மேலும் அதிகரிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தினரால் உடனடி மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டாலும், அவை குறுகிய காலத்துக்கானவை மட்டுமே எனக் குறிப்பிட்ட முன்னாள் தூதுவர், நாட்டின் மறுசீரமைப்பு பணிகளுக்குப் போதுமானதாக இருக்காது என எச்சரித்தார்.

உலகளாவிய போர்கள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பிற இயற்கை பேரழிவுகள் காரணமாக சர்வதேச கவனம் வேகமாக மாறி வரும் நிலையில், இலங்கை விரைவாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தற்போதைய அவசர நிலை உலக அரங்கில் மங்கிவிடும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நேரம் இலங்கைக்கு சாதகமான காலகட்டம் என சுட்டிக்காட்டிய கணநாதன், கட்டமைப்பு மறுசீரமைப்பு, வாழ்வாதார மீட்பு மற்றும் பேரிடர் எதிர்ப்பு திறன் மேம்பாடு ஆகியவற்றுக்குத் தேவையான நிதியுதவிகளை உறுதி செய்ய இந்த வாய்ப்பை தவறவிடக்கூடாது எனக் குறிப்பிட்டார். தெளிவான மறுசீரமைப்பு செயற்பாட்டு திட்டம் மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புடன் நன்கொடையாளர் மாநாடு நடத்தப்படுவது, சர்வதேச வளர்ச்சி பங்காளிகளின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் எனவும், தாமதம் செய்வதன் விலை மிக அதிகமானதாக இருக்கும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## 18,000இற்கும்...

சிறுதொழில்கள், 3,998 நடுத்தர தொழில்கள் மற்றும் 557 பெரிய தொழில்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட தொழில்கள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்காக 071 266 6660 என்ற சிறப்பு தொலைபேசி சேவையை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

தொழில் உரிமையாளர்கள் தாமதமின்றி தங்களது தகவல்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் www.industry.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்படவேண்டும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கைக்கு...

அடிப்படையில் கூடுதல் வளங்களை இயக்கத் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத் திட்டங்களில் தேவையான மாற்றங்களைச் செய்வதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

உதவிகள் விரைவாக, வெளிப்படையாக மற்றும் பயனுள்ளதாக மிகவும் தேவையுள்ளவர்களிடம் சென்றடைய வலுவான கண்காணிப்பு முறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், அபிவிருத்தி கூட்டாளர்களுடன் ஒருங்கிணைந்து நீண்டகால மீட்பு மற்றும் மறுசீரமைப்பை உறுதிப்படுத்துவதாகவும் உலக வங்கி கூறியுள்ளது. (அ)

## அர்ஜுன...

லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

இந்த தகவல்கள், ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக்க ரணதுங்க தொடர்பான வழக்கு விசாரணையின் போது, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான உதவி இயக்குநர் (சட்டம்) அனுஷா சம்மந்தப்பெரும மூலம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டன.

விசாரணை தொடர்பான விவரங்களை முன்வைத்த அவர், 2017-2018 ஆண்டுகளுக்கான பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் கொள்முதல் தொடர்பான மூன்று நீண்டகால கேள்வி கோரல்கள் இரத்து செய்யப்பட்டதாகவும், அதன் பின்னர் உயர் விலையில் கேள்வி கோரல்களுக்கு செல்லப்பட்ட தீர்மானத்தால் கூட்டுத்தாபனத்துக்கு சுமார் ரூ. 800 மில்லியன் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் தம்மிக்க ரணதுங்க கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

அதன்படி, முதல் சந்தேகநபராக பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் தம்மிக்க ரணதுங்கவும், இரண்டாவது சந்தேக நபராக பெற்றோலிய வள அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் பெயரிடப்பட்டுள்ளதாகவும், இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

மேலும், அர்ஜுன ரணதுங்க தற்போது வெளிநாட்டில் இருப்பதால் நேற்று அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

விசாரணைகள் தொடர்ந்து வருவதால், சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்ற உத்தரவு வழங்குமாறு அவர் கோரினார்.

சந்தேக நபரின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தனது தரப்பினர் விசாரணைகளுக்கு ஒத்துழைத்து வருவதாகவும், பிணைச் சட்டத்தின் கீழ் பொருத்தமான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்குமாறு கோரினார்.

வாதங்களை பரிசீலித்த பின்னர், பிரதான நீதவான், சந்தேகநபரை ரூ. ஒரு மில்லியன் வீதம் இரண்டு உறுதி மொழி பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், வெளிநாடு செல்லத் தடை விதித்தார். (அ)

## தமிழ் - சிங்கள...

நெருக் கடியை நோக்கி நகர்கிறது. இன்று (2025 டிசெம்பர் 15) நான் சொல்வதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 2026 ஏப்ரல் 15 அன்று இதன் பொருள் உங்களுக்கு புரியும்," என்று அவர் கூறினார். (அ)

## 3 நாட்கள்...

வரை ஐந்து நாட்கள் விடுமுறை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். அதன் பின்னர் டிசெம்பர் 29 அன்று பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, டிசெம்பர் 31 வரை மட்டுமே இயங்கும் எனவும் கூறினார்.

"தவணையின் இறுதியில் பாடசாலைகள் மூன்று நாட்கள் மட்டுமே நடத்தப்படுவது ஏன் என்ற கேள்வி முழு பாடசாலை அமைப்பிலும் எழுந்துள்ளது. பாடசாலை நாட்களின் எண்ணிக்கையை செயற்கையாக அதிகரிப்பதற்கான முயற்சியாக இந்த முடிவு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது," என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த முடிவு தேவையற்றதுமாகவும், பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு சுமையாகவும் இருக்கும் என அவர் விமர்சித்தார்.

மேலும், அந்த சுற்றறிக்கையில் அடுத்த கல்வியாண்டின் முதல் தவணை 2026 ஜனவரி 5 அன்று ஆரம்பமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம்...

சமன் அமரசிங்க, விமான நிலைய இணை முகாமைத்துவத் தலைவர் சஞ்சீவ அமரபதி, இலங்கை விமான நிலைய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், பொறியியலாளர் ஆகியோரால் சர்வமத வழிபாடுகளோடு அடிக்கல் நாட்டப்பட்டது. குறித்த கட்டடம் அமைப்பதன் மூலம் பயணிகளின் எதிர்நோக்கும் சிரமங்களை தீர்க்க முடியும் என எதிராபார்க்கப்படுதாறது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்த அரசு திட்டம்!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 16

**பேரழிவால் தாக்கம் பெற்ற நாட்டை மீளக் கட்டமைக்கும் பொருட்டு சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.**

உலக வங்கி மற்றும் தொடர்புடைய அரசு அமைப்புகள் இணைந்து மேற்கொள்ளும் நட்ட ஈட்டு மதிப்பீடு முடிவடைவதற்கு பின்னர் மாநாடு நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறினார்.

அரசுக்கு சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை அழைக்கும் திட்டம் உள்ளதா எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நவம்பர் 28 ஏற்பட்ட டித்வா புயல், நாடு முழுவதும் கடுமையான வெள்ளங்களையும் நிலச்சரிவுகளையும் ஏற்படுத்தி, 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்புக்கும் நெடுஞ்சாலைகள், மின்விநியோக கட்டமைப்புகள், கால்வாய்கள், கட்டடங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளுக்கு பெரும் சேதத்துக்கும் காரணமாகியுள்ளது.

முன்னதாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஜெனரல் பிரபாத் சந்திரகீர்த்தி, மொத்த சேதத்தை சுமார் 6 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிட்டுள்ளார்.

மீள்கட்டமைப்புக்கான நிதிகளை இயக்குவதற்காக, அரசு ஏற்கனவே "மீண்டெழும் இலங்கை" திட்டத்தை நிறுவியுள்ளது. இதுவரை ரூ. 3.4 பில்லியனுக்கும் அதிகமான நன்கொடைகள், தொழில் முனைவோர்கள் வழங்கிய பங்களிப்புகள் உட்பட, பெறப்பட்டுள்ளன.

பல நாடுகளும் அவசர உதவிகளை உறுதியளித்துள்ளன. அதில் இந்தியா முதன்முதலில் பதில் அளித்தது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, ஐக்கிய இராச்சியம், மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பிற நாடுகளும் ஆதரவு வழங்கியுள்ளன.

கூடுதலாக, ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் மனிதாபிமான பங்காளர்கள் கடந்த வாரம் மனிதாபிமான முன்னுரிமைத் திட்டம் ஒன்றை அறிவித்து, டித்வா புயலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அவசர உயிர்காக்கும் உதவிகளை விரிவாக்குவதற்காக 35.3 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூ. 10.9 பில்லியன்) கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்தத் திட்டம், அரசின் சர்வதேச உதவி கோரிக்கையையடுத்து உருவாக்கப்பட்டதாகும்.

2025 டிசெம்பர் முதல் 2026 ஏப்ரல் வரை 6,58,000 மிகவும் பாதிப்படைந்த மக்களை எட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மிகுந்த பாதிப்புக்குள்ளான பகுதிகள் மற்றும் மக்களுக்கே ஆதரவைத் திருப்புவதை மூலம், தேசிய மட்டத்தில் நடைபெறும் முயற்சிகளுக்குத் துணை நிற்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான முன்னுரிமைத் திட்டம் கல்வி, உணவுப் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் ஊட்டச்சத்து, சுகாதாரப் பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்கள்,முகாம் ஒருங்கிணைப்பு தண்ணீர், சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளை உள்ளடக்கியுள்ளது. (அ)

# ரயில் பாதைகளைப் புனரமைக்க 400 மில்லியன் டொலர் செலவாகும்

கொழும்பு, டிசெ. 16

அனர்த்தங்களினால் சேதமடைந்த ரயில் பாதைகளைப் புனரமைக்க சுமார் 400 மில்லியன் டொலர் செலவாகும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து ரயில் பாதைகளின் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்குச் சிறிது காலம் செல்லும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட 236 சுகாதார நிறுவனங்களில் சுமார் 90 வீதம் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பதுளை - ஸ்பிரிங்வெலி மற்றும் கந்தேகெதர மருத்துவமனைகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடுமையாகப் பாதிக்கப்பட்ட மகியங்கனை மற்றும் சிலாபம் மருத்துவமனைகள் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், அனர்த்தங்கள் காரணமாக மருத்துவமனைகளில் உள்ள சி.டி ஸ்கானர்கள் போன்ற பல உபகரணங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி கூறினார். (அ)

# பதுளையில் ஐந்து கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கு விடுமுறை நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 16

பதுளை மாவட்டத்தின் கல்வி வலயங்களான பதுளை வலயம், பண்டாரவளை வலயம், வெலிமடை வலயம், பஸ்ஸரை வலயம் மற்றும் ஊவா-பரணகம வலயம் ஆகியவற்றில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்று ஆரம்பிக்கப்படமாட்டாது. அந்த வலயங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் 29ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாஸ தெரிவித்தார்.

டித்வா சூறாவளியுடன் நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக மூடப்பட்ட ஊவா மாகாணப் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய அவர், இரண்டு தினங்களின் கீழ் ஊவா மாகாணப் பாடசாலைகளை மீண்டும் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஊவா மாகாணத்தில் உள்ள மொனராகலை மாவட்டத்தின் 291 பாடசாலைகளில், பிபிலை வலயத்தில் உள்ள தெஹிகலவத்த பாடசாலை தவிர ஏனைய 290 பாடசாலைகளையும் இன்று திறக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், பதுளை மாவட்டத்தில் உள்ள மகொயங்கனை வலயத்தின் திக்கியாய வித்தியாலயம், களுக்கல வித்தியாலயம் மற்றும் பின்னகொல்ல வித்தியாலயம் ஆகியவற்றைத் தவிர ஏனைய 78 பாடசாலைகளும் இன்று திறக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சிட்னி துப்பாக்கிச் சூடு; ஜனாதிபதி அனுதாபம்

கொழும்பு, டிசெ. 16

அவுஸ்திரேலியாவின் சிட்னி, பொண்டி கடற்கரையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 16 பேர் உயிரிழந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இது தொடர்பில் அவரது சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

"சிட்னியின் பொண்டி கடற்கரையில் யூத சமூகத்தினரின் மத வழிபாட்டு நிகழ்வான ஹனுக்கா கொண்டாட்டத்தை இலக்காக வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை இலங்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

அவுஸ்திரேலிய மக்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவுஸ்திரேலியாவுடன் இலங்கை ஒற்றுமையுடன் உடன் நிற்கிறது. மேலும் வன்முறை மற்றும் வெறுப்புக்கு எங்கள் சமூகங்களில் இடமில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்"-என்றுள்ளது. (அ)

# அத்தியாவசிய மருந்துகள், உணவுப் பொருள்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய இந்தியா!

கொழும்பு, டிசெ. 16

இந்திய அரசு, இலங்கையின் சுகாதார அமைச்சர் கேட்டுக்கொண்டதன் பேரில், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உலர் உணவுப் பொருட்களைக் கொண்ட ஒரு நன்கொடையை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த நன்கொடையில் 17 வகையான அத்தியாவசிய மருந்துகளும், 14,200 கிலோகிராம்களுக்கு அதிகமான உலர் உணவுப் பொருட்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த நன்கொடை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்திய துணைத் தூதுவர் சத்யஞ்சல் பாண்டேயினால், சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நன்கொடை, இலங்கையின் சுகாதார மற்றும் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக் வழங்கப்பட்டது.




# நெருக்கடியான நிலையிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைக்கத் தயார்!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 16

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயங்களுக்கும், மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறிப்பிடும் விடயங்களுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் ஆலோசனை வழங்க தயாராக உள்ளதாக பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான நிவாரணம் கிடைக்கவில்லை.

அதேபோல் நிவாரண நிதியும் கிடைக்கவில்லை.

பெரும்பாலானவர்களை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயங்களுக்கும், மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குறிப்பிடும் விடயங்களுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நிவாரணம் வழங்கல் தொடர்பில் சுற்றறிக்கைகள் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் தரப்படுத்தல் விதிகள் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில்



தேர்தல் பிரசார மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை போன்று நிவாரண கொடுப்பனவு அறிவிப்புகளும் அமைந்துவிடக்கூடாது.

தற்போதைய நெருக்கடி நிலைமை மற்றும் மக்களுக்கு நிவாரணமளிப்பது குறித்து ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் ஆலோசனை வழங்க தயாராகவே இருக்கிறோம்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றிப் பெறச் செய்ய வேண்டுமாயின் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.